Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953,

விரோதி௵ (1889) ஆவணி௴ 25உ ஆரம்பமானது.

இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எடு] யாழ்ப்பாணம்:- சோபகிருது௵ ஆவணி௴ உகஉ வெள்ளிக்கிழமை (6 September. 1963) [இல-உ௩

அனைத்துலக சமயம் சைவம்

—:0:—

ஆதி அமெரிக்கர் சைவ மக்களே

—0—

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

"சைவசமயமே சமயம்
சமயாதீதப் பழம்பொருள்"
-தாயுமானவர்.

சிவ வழிபாடு மிகத்தொன்மை வாய்ந்தது; காலங் கடந்த பழமையுடையது. இவ் வழிபாடே ஒரு காலத்தில் உலகம் முழுமையிலும் பரவியிருந்தது. இதனை நிலைநாட்டுதற்குப் பல வலிய சான்றுகளுள்ளன. இச்சான்றுகள் மேல்நாட்டறிஞர் எழுதியுள்ள வரலாற்று நூல்களிலும் தொல்பொருள் ஆராய்ச்சிக் குறிப்புகளிலும் ஆங்காங்கு சிதறிக் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் தொகுத்து ஓரிடத்தில் வைத்து ஊன்றிப் பயின்றால் மிக மிகப் பழங்காலத்தில் சிவ வழிபாடு ஒன்றே உலகம் முழுமையிலும் பரவியிருந்ததென்பதைப்பற்றிய ஐயம் சிறிதும் தோன்றமாட்டாது. இங்கு கூறப்படுவன யாவற்றுக்கும் சிறந்த மேற்கோள்களுள்ளன. அவற்றுட் சிலவற்றை ஏற்புடை இடங்களில் ஆங்காங்கு எடுத்துக் காட்டியிருக்கின்றோம்.

அமெரிக்காவில் மிகப் பழைய சிவன்கோவில்

மிகப்பழைய சிவன்கோயில் வட அமெரிக்காவிலிருக்கின்றது வட அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் காலராடோ என்னும் ஆறு உளது. அது தரைமட்டத்திலிருந்து ஒரு கல் ஆழத்தில் ஓடுகின்றது. அது தரையை ஒருகல் ஆழம் அரித்துச் செல்வதற்கு ஏறக்குறைய ஒரு இலட்சம் ஆண்டுகளாகுமெனப் புவியியலார் பகர்கின்றனர். அவ்வாற்றின் ஒரு கரையில் பீடபூமி ஒன்று இருக்கின்றது. அப்பீடபூமி அங்குள்ள மக்களால் சிவன்கோயில் என மிகப் பழங்காலம் முதல் அறியப்பட்டு வருகின்றது. அப் பீடபூமிக்கு ஏறிச்செல்வது எவருக்கும் முடியாமலிருந்தது. அப் பீடபூமி ஆற்றோடு தொடர்பில்லாமற் போனகாலம் குறைந்தது பத்தாயிரம் ஆண்டுகளாகலாமெனப் புவியியலார் கூறுகின்றனர். அமெரிக்க தொல்பொருள் இயலார் 1937-ல் விமானமூலம் அப்பீடபூமியை அடைந்தார்கள், அங்கு கற்கால மக்கள் பயன்படுத்திய சில கல்லாயுதங்கள் காணப்பட்டன. இச்செய்தி பெருவியப்பளிப்பதாகச் செய்தித்தாள்களில் வெளிவந்தது. ஏறக்குறையப் பத்தாயிரம் ஆண்டுகளளவில் சிவ வழிபாடு அமெரிக்காவிலிருந்ததென்பதை இது சான்றுபடுத்துகின்றது.

சமன்லால் என்னும் இந்தியர் அமெரிக்காவில் பல காலம் இருந்து ஆராய்ச்சி நடத்தி இந்து-அமெரிக்கா என்னும் சிறந்த [illegible] ஆங்கில மொழியில் எழுதி வெளியிட்டார். அமெரிக்கா முழுமையிலும் சிவலிங்க வழிபாடு நிலவியதென்பதை எளிதில் நாட்டமுடியுமென்றும், அங்கு யானைமுகக் கடவுட் சிலைகள் காணப்பட்டனவென்றும், அமெரிக்க ஆதிக்குடிகளின் வாழ்க்கை முறைகள் பெரும்பாலும் இந்தியாவோடு தொடர்புடையனவாக விருக்கின்றனவென்றும், ஆதிக்குடியினர் இந்தியாவினின்றும் சென்றவர்களெனச் சொல்வதற்குச் சான்றாக விருக்கின்றன வென்றும் அவர் கூறியிருக்கின்றார்.

"சிவலிங்கம் அறக்கடவுள் (யமன்) யானைமுகக்கடவுள் என்பவை அமெரிக்காவில் ஒரு காலத்து ஆங்காங்கு வழிபடப்பட்டன என்பதை நன்கு உறுதிப்படுத்தலாம்" (இந்து-அமெரிக்கா பக். 60)

ஃபிரடரிக் ரைட் (Frederic Wright) என்னும் மேல்நாட்டறிஞர் மனிதனின் தொடக்கமும் தொன்மையும் (Origin and antiquity of man) என்னும் சிறந்த ஆராய்ச்சி நூல் ஒன்றை

(தொடர்ச்சி 4 பக்கம்)

நற் சிந்தனை

ஒன்றென் றிருதெய்வம்
உண்டென் றிருவென்று
அன்றுசொன்ன பட்டினத்தா
ரடிபணிவ தெக்காலம்.

ஏழாலையில் பலி நிறுத்தல்

ஏழாலை கிழக்கு இந்துசமய விருத்திச் சபையினர் ஏழாலை இலந்தைகட்டி வயிரவர் கோவிலில் வருடந்தோறும் நடைபெற்று வரும் உயிர்ப் பலியை நீக்குதற்பொருட்டு இன்று மாலை 6 மணிக்கு மேற்படி கோவிலில் பொதுக் கூட்டம் ஒன்றும், கூட்டுவழிபாடும் நடாத்துகின்றனர்.

பண்டிதர் திரு. செ. துரைசிங்கம், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், சங்கீதபூஷணம் திரு. ஆ நமசிவாயம், பண்டிதை, தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

சிவானந்தர் ஞாபகார்த்த விழா

எதிர்வரும் 8-9-63 ஞாயிற்றுக்கிழமை இமையஜோதி சுவாமி சிவானந்த சரஸ்வதி மகரிஷி அவர்களின் மகாசமாதி ஞாபகார்த்த விழாவும் அன்னாரின் 77-ம் பிறந்ததின விழாவும், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மண்டபத்தில் சுவாமி சுப்பிரமணியானந்தா அவர்களின் தலைமையில் காலை 6 மணி தொடக்கம் மாலை 9 மணி வரை கொண்டாடப்படும்.

நாளை நடக்கும் நாவலர் சற்குரு மணிமாலை வெளியீடு

(பண்டிதர். த. சுப்பிரமணியம்)

ஒரு நாட்டின் பெருமைக்கும் சிறப்புக்கும் இலக்காக விளங்குபவர்கள் அந்நாட்டின் புலவர்களாவர். நாட்டின் பெருமையைக்காக்கும் பணியில் ஈடுபாடுடையவர்கள் அப்புலவர்களது நூல்களை அழியாது பாதுகாத்தல் வேண்டும். அன்று முதல் இன்றுவரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த புலவர்கள் பலர், அவர்கள் ஆக்கிய பல நூல்கள் கற்போருங் கேட்போருமின்றிக் கவனிப்பாருமின்றி அழிந்துபோய்விட்டன,

இற்றைக்குச் சுமார் 35 வருடங்களுக்கு முன் நம்மத்தியில் வாழ்ந்த ஸ்ரீ அம்பலவாண நாவல சுவாமிகள் வடமொழி தென்மொழிகளிலாக்கிய நூல்கள் பல அழிந்து போய்விட்டன. சில தேடுவாரின்றி மறைந்து கிடக்கின்றன,

இவர் நம் நாட்டி[illegible] நாட்டிலும் பெரும் புலவராக — நாவலராக விளங்கியவர். அக்காலத்து அவருடைய பெருமையை அறியாதவர் இலரெனப் பலர் சொல்லக் கேட்டுள்ளேம். சிதம்பரத்திலும், திருநெல்வேலியிலும் அவர் புகழ் இன்றும் நின்று நிலவுகின்றது.

அம்பலவாண நாவலர் வடமொழி, தென்மொழி, ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் வல்லுநர்; பல நூல்களை யாக்கியவர்; திருவாவடுதுறை யாதீனத்து "நாவலர்" பட்டம் பெற்று நன்கு மதிக்கப்பட்டவர்; ஆறுமுகநாவலரின் அடியொற்றித் தொண்டுகள் புரிந்தவர்; இவருடைய பெருமைகளும் தொண்டுகளும் மறக்கப்படுகின்றன. அங்ஙனம் அவை மறைந்துபோக விடாது நிலையான ஒரு கைங்கரியத்தைச் செய்யவேண்டுமென்னும் [illegible] [illegible]பது.

அத்தவப்பெரும் புதல்வனையும், அன்னாரை யீன்றளித்த கிராமத்தின் பெருமையையும் காப்பது அன்னாரின்வழி வந்தவர்களுடைய நீங்காத கடமையாகும்.

சைவத் தமிழுலகம் இந்நூலை உவந்தேற்றுக்கொள்ளுமென்பது எமது துணிவு.

உ

வித்தாம் முளையாகும் வேரே தானாம்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியார்க்கோர் பாங்க னுமாம்
பால்நிறமுமாம் பரஞ் சோதி தானாம்
தோத்தாம் அமரர்கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்றாதென் உள்ளத்தி னுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்குக் காணா காட்டுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே.

x x x

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

திருவிளையாடற் புராணம் தமிழர் பெருநிதி

[இந்துசாதன அபிமான நிருபர்,
திரு. மா பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

புரட்டாதி, 1.

ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள் காலையில் ஆதீனத்தின் பூஜாமூர்த்தியான செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷத்திட்டத்தில் அபிஷேகங்கள் குறிப்பாக 1000 (ஆயிரம்) சேர் பசும்பால் அபிடேகம் செய்து அர்ச்சனை ஆராதனைகள் நடத்தி எல்லோர்க்கும் அருள் பிரசாதம் வழங்கினார்கள் பூஜா மண்டபம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பட்டமளிப்பு விழா

இரவு 7 மணிக்கு "திருநெறிய தெய்வத் தமிழ் மன்ற"த்தில் ஆவணிமூலத் திருநாள் பட்டமளிப்பு விழா ஆரம்பமாகியது. விழாத் தொடக்கத்துக்கு முன்பு சுமார் 2 மணி நேரம் பிரபல திருமுறைவாணர்களின் திருமுறைப்பாராயணம் நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள் சென்னை ஸ்ரீ ச. சிவகுமாரன் எம். எ. அவர்களுக்கு "பைந்தமிழ்ச்செல்வர்" என்ற சிறப்புப்பட்டம் வழங்கி விலை உயர்ந்த பொன்னாடைப் போர்த்திக் கௌரவப்படுத்தி ஆசியுரை கூறுகையில் இன்று ஆவணிமூலத் திருநாள், செந்தமிழ்ச்சொக்கர் அன்பின் பெருமையை அனைத்துலகும் அறியுமாறு திருவிளையாடல் புரிந்த திருநாள், இந்த நன்னாள் திருவிளையாடல் திருநாளாக அமைந்துள்ளமை பெருஞ் சிறப்பாகும். சோம - சூரி - அக்கினியாகிய முக்கண்களை உடைய நம் பெருமானுடைய திருவருளால் நமக்குக் கிடைத்துள்ள முப்பெரும் புராணங்கள் திருவிளையாடல் புராணம், திருத்தொண்டர் (பெரிய) புராணம், கந்தபுராணம் ஆகிய மூன்றுமாம். இவற்றுள் சோமன் — திருவிளையாடல் புராணம், சூரியன் — திருத்தொண்டர் (பெரிய) புராணம், அக்கினி-கந்தபுராணம், இவற்றுள் இன்று சிந்திக்கும் திருநூல் திருவிளையாடல் புராணம். "நம் நாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி, நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண்" என்று அப்பர் சுவாமிகள் அருளியபடி, இறைவனே திருவுருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து பொற்கிழி வழங்கிய புண்ணிய மூர்த்தியாக உள்ளான். அவ்வருளாணைப்படியே இவ்வாதீனமும் ஒவ்வோர் ஆவணி மூலத்தும் புலவர்களுக்குப் பொற்கிழி வழங்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

கன்னிப் பேச்சு

எனது தொகுதி மக்கள் "எங்கள் வாக்கை உங்களுக்குத் தருகிறோம். பதிலாக குடிக்கத் தண்ணீர் கிடைக்க வழி வகுத்துத் தந்தால் போதும்" என்று கூறும் பரிதாப நிலையைக் கண்ணுற்றேன். என்றும்,

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் எனது தொகுதியைச் சேர்ந்த ஏராளம் இளைஞர்களுக்கு வேலை அளிப்பதற்கு வேண்டிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு மின்சார வசதியின்மை தடையாக நிற்கிறது. அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளில் அதிமுக்கியமான தேவைகளையாவது பூர்த்தியாக்க நினைக்க வேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் தமது முதல் முழக்கத்தில் திரு. வி. நவரத்தினம் (தமிழரசு கட்சி உறுப்பினர்) —சென்ற சனிக்கிழமை நடைபெற்ற ஊர்காவற்றுறை இடைத்தேர்தலில் பத்தாயிரத்திலும் அதிகமான அதிகப்படி வாக்குகளால் தெரிந்தெடுக்கப்பட்டவர் குறிப்பிட்டார்.

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ௵ ஆவணி ௴
௨௧ ௳ வெள்ளிக்கிழமை

பத்திரிகைப் பணிபற்றி ஆராய்தல்

பேச்சு, எழுத்து, எண்ணம் எல்லாம் எவர்களாலும் சுதந்திரமாக அநுபவிக்கப்பெற வேண்டியவை என்பது மக்கள் ஆட்சியின் மகத்தான குறிக்கோள். இந்தக் கொள்கையே எங்கள் கொள்கை யென்று சொல்லாத அரசியற்றலைவர்களும், அமைச்சர்களும் இல்லை. எனினும் ஈழநாட்டிலே பத்திரிகைப்பணி பண்புடன் ஆற்றப்பெறவில்லை யென்று திருமதி சிறீமாவோ பண்டாரநாயகாவைத் தலைமையாகக் கொண்டிருக்கும் கட்சியும் அமைச்சர் அவையும கருதுகின்றன. அக்கருத்து, காலத்துக்குக்காலம் பல விபரீத விளக்கங்களுக்குள்ளாகி, இபபொழுது எப்படியும் பத்திரிகைப்பணியை ஆராய்ந்து அறிக்கை வெளியிட வேண்டும என்ற முடிவில் வந்துவிட்டது.

பத்திரிகைப் பணி ஆராய்ச்சி ஆணையாளர் யார் என்ற கேள்வியே இப்பொழுது எங்கள் கவனத்தைக் கவருவது மூவரின் நாமங்கள் வெளியிடப்பட்டன. ஒருவர் பல ஆராய்ச்சி ஆணைகள் தாங்கியவரும், உயர்நீதி மன்றத்தில் உத்தம பதவி வகித்தவரும ஆவர், ஏனைய இருவரும் கட்சிப்பற்றுடையவர்கள் என்றும், நெடுநாட்களாகச் செஞ்சேனையின அரசியற் புரட்சிக்கொள்கையை யதார்த்து வருகின்றவர்கள் என்றும் பலர் கூறக் கேட்டிருக்கின்றோம். அன்றியும் இம்மூவரில் ஒருவரான பெண்மணி குணவர்த்தன முன ஒருகால் ஒரு பத்திரிகை நடத்திவந்தவர் என்பது யாவருமறிந்த உண்மையாகும். எனவே ஆராய்ச்சியிற் புகும் ஆணையாளர்கள் கொள்கைப்பற்றோ அரசியற்சார்போ யாதுமில்லாதவர்களாய் நடு நின்று ஆராய்ந்தறியக் கூடியவர்களா யமைதல் வேண்டும என்பது அவசிய தேவையாகும்.

இந்த ஆராய்ச்சி எதற்காக வேண்டும் என்று நியாயங்காட்டுகின்ற சுதந்திரக்கட்சி ஆட்சியாளர் அந்த நியாயங்களின் அடிப்படையையே ஆணையாளர்களின் நியமனம் பாதிக்கின்றதென்பதை மறுக்க மாட்டார்கள். உண்மையிற் பத்திரிகைப்பண்பு சிறக்க வேண்டுமென்றால் ஆணையாளர்கள் கட்சிப்பற்றற்றவர்களாய் அறிஞர்களாய் ஆற்றல் உள்ளவர்களாய் அமைதலன்றோ முறை?

மந்திர மூர்த்தி முதலியவற்றின் தத்துவ விளக்கம்

முற்றொடர்—2

கலா மூர்த்தி

சிவபெருமான் முப்பத்தெட்டுக் கலாசத்திகளைத் திருமேனியாகக் கொண்டமையாற் கலாமூர்த்தி என்னுந் திருநாமத்தைப் பொருந்தினர்.

ஈசானத்தின் பகுதியாகும் ஈசாநியின் ஐந்து கூறுகளாகிய சசிநி ஊர்த்துவ சிரசாகவும், அங்கதை கிழக்குச் (பூர்வ) சிரசாகவும், இஷ்டை தெற்குச் (தக்ஷிண) சிரசாகவும், நரீசி வடக்குச் (உத்தர) சிரசாகவும், ஜ்வாலினி மேற்குச் (பச்சிம) சிரசாகவும்; தற்புருஷத்தின் பகுதியாகும் பூரணியின் நான்கு கூறுகளாகிய *சாந்தி கிழக்குமுக (வத்திர) மாகவும், வித்தை தெற்கு முகமாகவும், பிரதிஷ்டை வடக்குமுகமாகவும், நிவிர்த்தி மேற்குமுகமாகவும், அகோரத்தின் பகுதியாகும் ஆர்த்தியின் எட்டுக்கூறுகளாகிய தமை இருதயமாகவும் மோகை கண்டமாகவும், சயை வலத்தோளாகவும், நிஷ்டை இடத்தோளாகவும், மிருத்யு நாபியாகவும், மாயை வயிறாகவும், பயை முதுகாகவும், சரை மார்பாகவும், வாமதேவத்தின் பகுதியாகும் வாமையின் பதின்மூன்று கூறுகளாகிய இரஜை குய்யமாகவும், இரட்சை கோசமாகவும், ரதி வலத்தொடையாகவும்; பாலி இடத்தொடையாகவும், காமை வல முழந்தாளாகவும், சமயமினி இட முழந்தாளாகவும், பிரியை வலக்கணைக்காலாகவும், புத்தி இடக்கணைக்காலாகவும், காரி வலக்குதமாகவும், தாத்திரி இடக்குதமாகவும், பிரமணி டியாகவும், மோகினி வலப்பக்கமாகவும், பவை இடப்பக்கமாகவும், சத்தியோசாதத்தின் பகுதியாகும் மூர்த்தியின் எட்டுக்கூறுகளாகிய சித்தி வலப்பாதமாகவும், இருத்தி இடப்பாதமாகவும், தியுதி வலக்கையாகவும், இலட்சுமி இடக்கையாகவும், மேதை மூக்காகவும், காந்தி திருமுடியாகவும், சுவதை வலப்புயமாகவும், திருதி இடப்புயமாகவுமிருக்கும்.

ஸ்ரீ. வை. விருத்தகிரீசசர்மா,
குருக்கள் வளவு, அச்சுவேலி

இங்ஙனம் முப்பத்தெட்டுக் கலாசத்தி ரூபமாகிய உறுப்புக்களுடைய பராசத்தி நிஷ்கள சிவத்திற்குச் சுதந்திரமாகையால இவ்வுறுப்புக்களுடன் கூடிய கருமசாதாக்கியருடைய திருநாமம் சகளநிட்களமாம்.

சதாசிவ ரூபம்

இருடீர் முப்பத் தெண்கலை மயமா
முருவடி வறுசிவனுக்
குண்டா கையிற்
சிறக்கு மைம்மு கத்தவன்றிரு நாம
நிறற்குஞ் சகள நிட்கள மெனவே.

தீயின்சத்தியொன்றுதானே சுடுதல் அடுதல் முதலிய தொழில்வேறுபாட்டால் சுடுதற் சத்தி அடுதற்சத்தியென்றற்றொடக்கத்துப் பல்வேறு வகைப்படுமாறு போல, சிவசத்தியொன்றே காரிய வேறுபாட்டால் பரை ஆதி இச்சை ஞானம் கிரியையென்று ஐவகைச் சத்திகளாகவும், முறையே ஐந்தும் நான்கும் எட்டும் பதின்மூன்றும் எட்டுமாகிய கூறுபாடுடைய ஈசானி முதலிய ஐவகைச் சத்திகளாகவும் ஆரணி சனனி முதலிய மூவகைச் சத்திகளாகவும், நிவிர்த்தி பிரதிட்டை முதலிய ஐவகைச் சத்திகளாயும், வாமை சேட்டை முதலிய அட்ட சத்திகளாயும், பரவாஈசுவரி அபரவாதீசுவரி மனோன்மனி மகேசை உமை திருவாணியென எழுவகைச் சிவபேதங்கட்கும் முறையே எழுவகைச் சத்திகளாயும், அத்தியான்மிக மெனப்படும் உன்மனை சமனை முதலிய கலைகளாயும் இன்னும் பல வேறு வகைப்பட்டு நிற்கும் .... இவற்றினியல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க.

—சிவஞானபோதச்சிற்றுரை. சூ. 2. அதி. 4.

—தொடரும்.

---

* அவ்வியக்தகலையை ஊர்த்துவ முகமாக அகோரசிவாசாரியர் கூறியிருக்கின்றனர்.

நேயர்கள் நெஞ்சம்

முதலில் சைவ சித்தாந்தம் படிக்குக!

சில வருடங்களுக்கு முன் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் தயாரித்து வித்தியாதிபதிக்குதவிய "சைவ சித்தாந்த பாடத்திட்டம்" நடைமுறையிலிருந்தது.

யாரோ விஷமிகளுடைய சூழ்ச்சியால் வேதாந்த நாராசம் நுழைந்த "இந்துசமய பாடத்திட்டம்" ஒன்று ஜி. சி. ஈ. வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு வலுக்கட்டாயமாகத் திணிக்கப் பெற்றது.

அதைப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் வேறு சில சைவப்பெரியார்களும் எதிர்த்ததோடு யாழ். சைவபரிபாலனசபை, சைவாசிரியசங்கம் என்பனவும் இத்திணிப்பை எதிர்த்து நடவடிக்கைகள் மேற்கொண்டன.

முன்னர் எதிரிகளுக்குத்தேள் கொட்டினாற்போல நாவலர் ஐயா அவர்கள் சொல்லாலும், செயலாலும் சாதித்து வந்தார்.

இன்றைய சைவத்தொண்டர்களும் சைவச்சபைகளும் அவ் வழியிற் கருமமாற்றுகின்றனவோ என ஐயுறுகின்றோம்.

உரைக்கோட்பாடுகளை மதம் என்று கொள்ளும் மாயாவாதிகளின் விளையாட்டுச் சைவப்பிள்ளைகள் படிக்கும் பாடத் திட்டத்திலும் இடம்பெற்றுள்ளது.

சைவ சமய பாடத்திட்டம் முன்னர் எவ்வாறிருந்தது?

சைவசமய அறிவு மட்டில் இருந்தாற் போதாது. பிற மதங்களும் அறிய வேண்டுமென்று சில மாயாவாத இந்துக்கள் அல்லது - குடிசன மதிப்புச் சைவர்கள், அல்லது எம்மதமும் சம்மதமெனக் கொள்வோர்கள் கருதி இந்தச் சூழ்ச்சியையைச் செய்திருக்கலாம்.

ஒருவன் பிறமதங்களை அறிய விரும்பினால் சுய மத அறிவு நிரம்பியபின் சங்கற்ப நிராகரணம் செய்தற்கேற்ற பக்குவ காலத்தில் படித்துணரலாம். அன்றி,

பிஞ்சு மனத்தையுடைய மாணவ மாணவிகளல்ல!

சி. சின்னையா
கச்சாய், 30-8-63.

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச்செய்த

உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 25)

குருலிங்க சங்கம வழிபாட்டு முறை

கற்றா மனம்போற் கசிந்துகசிந் தேயுருகி
யுற்றாசான் லிங்க முயர்வேடம் — பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனி னின்றிடுவா பார். 52.

கொ—கூ,— முத்தித் தலைவர், ஆசான் லிங்கம் உயர் வேடம் பற்று ஆக, கன்று ஆ மனம் போல கசிந்து கசிந்து (+ஏ) உருகி உற்று, முழுமலத்தை மோசிக்கும் பத்திதனில் நின்றிடுவர்; (ஆதலால் நீயும் இவ்வழிபாட்டு முறையைப்) பார்.

ப—ரை:— முத்தித் தலைவர் - சீவன் முத்தரானோர், ஆசான் லிங்கம் உயர் வேடம் பற்று ஆக - ஞானாசாரியனையும் சிவலிங்கப்பெருமானையும் பக்குவததாலுயர்ந்த மெய்யடியார்களையும் பற்றுக்கோடாகக்கொண்டு, கன்று ஆ மனம்போலக் கசிந்து கசிந்து உருகி உற்று - தன் கன்றை நினைத்து அன்பு சுரக்கும் பசுவினது உள்ளத்தைப்போல, (அம்மூவிடத்தும்) அயரா அன்பு மீக்கூர மனம் நெக்கு நெக்குருகிக் பொருந்தி, முழு மலத்தை மோசிக்கும் பத்திதனில் நின்றிடுவர்; பார் - (சீவன் முத்திநிலையில் நிற்குமளவும் வந்து பொருந்தும்) மலவாசனை முழுவதும் நீங்குதற்குரிய பத்தி நெறியிலே ஒழுகுவர்; ஆதலால், நீயும் அவ்வழிபாட்டு முறையை மேற்கொளவாயாக (- நோக்கி இயற்றுவாயாக)

'ஏ' அசை. ஞானமார்க்கத்தாரது மலவாதனை முற்றாயொழிதற்கும் அது காரணமாக முத்திப்பேறு முதிர்ந்து விளைதற்கும் குருலிங்க சங்கம வழிபாடு இன்றியமையாததாயிற்று. ஆகவே, அவ்வழிபாட்டு முறை சிறப்புறவேண்டுமென்பார் 'கற்றாமனம் போலக் கசிந்து கசிந்துருகி' நிற்கும் பத்தி வேண்டும என்றார்.

சொரூப சிவம் தடத்தசிவம் பரஞானத்தையுடையோர் நாயன்மார்கள் முதலியோர் சிவபேதமாய் நின்ற குருமூர்த்தமேயாம் எனத் தெளிந்து, குருவை வழிபடுதல் வேண்டும் அதனால், சிவன அக்குருவை அதிட்டித்து நின்று தீட்சைக்கிரமங்களினாலே மலம் நீக்கித் தன் வண்ணமாக்குவன். ஆதலின் குருவழிபாடு இன்றியமையாததாயிற்று,

ஆலயத்துள் இருக்கும் (சிவ)லிங்கம் சிவமே எனக் கண்டு வழிபாடியற்றும் சரியாவான்களுக்கு இறைவன் வெளிப்படாது நின்றருளுவன், கிரியாவான்களுக்கும் யோகியர்க்கும் கடைந்த வழித் தோன்றும் எரியும் கறந்த வழித்தோன்றும் பாலும்போல அவர் விரும்பிய வடிவாய் அப்போதப்போது தோன்றியருள் செய்வன். ஆனால், ஞானமார்க்கத்தாருக்கு கன்றையெண்ணிய பசுவின் முலைபால் சொரிவதுபோலக் கருணை மிகக்கொண்டு எப்போதும் வெளிப்பட்டு நின்று அருள்புரிவன். ஆதலின், லிங்க வழிபாடு இன்றியமையாததாயிற்று.

மெய்யடியார்கள் அகமும் புறமுந் தூயவராய் இறை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

காலத்தை வெல்லும் கதி

சென்ற சனிக்கிழமை மாலை 5-30 மணிவரையில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி 13-ம் திருவிழாவில் யாழ். சைவபரிபாலன சபை சமயப் பிரசாரகர் திரு. பொன். அப்புக்குட்டி அவர்கள்,

“நீலச்சிகண்டியிலேறும் பிரா
னெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தியுடன் வருவான்
குருநாதன் சொன்ன
சீலத்தை மெல்லத தெளிந்தறி
வார் சிவயோகிகளே
காலத்தை வென்றிருப்பார்
மரிப்பார் வெறுங் கர்மிகளே”

என்ற கந்தரலங்காரச் செய்யுளைப் பீடிகையாகக்கொண்டு ஓர் சிறந்த சைவப்பிரசங்கம் செய்தார்.

உலகில் நாத்திகம் புகுந்து சமயவளர்ச்சியைக் கெடுக்கமுனைந்து நிற்கின்றது. அருள் வழி நின்று திரிகாலமு முணர்ந்த அருணகிரிநாதர் இறைவன கோலமாமஞ்ஞை தன்னில் சக்தி சமேதராய் பண்டு மின்று மென்றும் காட்சிகொடுத்து உயிர்களைக் கை தூக்கிவிட நிற்கின்றான்.

இறைவனருளிய வேதாகமங்களைப் படித்துணர வேண்டும். அஃதையுணர்ந்து சரியை கிரியை யோகம் செய்து ஞானவான்களான சிவயோகிகளே அருள்வழி நின்று ஆட்டுத் தேவர்தம் விதியொழித்துக் காலத்தை வென்று சைவசித்தாந்தப் பெரும் பேறான ஆண்டானடிமை முத்தியாம் பெருவாழ்வைப் பெற்றார்கள். அல்லாதவர்கள் பிறந்தும் ஒரு பிரயோசனமுமில்லாது பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்தும் இன்னும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ற கர்மிகள் என்று வற்புறுத்தினார்.

உண்மை விளக்கம்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வனது வேடமாகிய திருநீறு கண்டிகை முதலிய வடிவத்தைப் பொருந்தியவராவர். காமக்கிழத்தியரது ஒழுக்கமும் அவர் அணியும் ஆடை சந்தனம் முதலியனவும் காமுகரை ஈர்த்து இன்பஞ் செய்தல் போல, அம்மெய்யடியாரது ஒழுக்கமும் அணிகளும் ஞானியரை வசீகரித்து அவர் நெறியில் வழுவாது நிறுத்தி இன்பஞ்செய்யு மாதலாலும், குறியிறந்து நின்ற இறைவன் அவர்களிடத்துத் தயிரின் கண் நெய்போல விளங்கித் தோன்றுவனுதலானும் மெய்யடியார் வழிபாடு (மிகவும்) இன்றியமையாததாயிற்று.

பொழிப்பு — சீவன்முத்தர்கள், குருலிங்க சங்கமங்களைப் பற்றுக்கோடாகக்கொண்டு, கன்றையுடைய பசுவைப்போல அம்மூவிடத்தும் இடையீடுபடாத அன்பினுல் மனம் நெக்குநெக்குருகிப் பொருந்தி, மலம் முற்றுக நீங்குதற்குரிய பத்திவழிப்படுவர்; நீயும் அவ்வழிநோக்கி ஒழுகுவாயாக.

—தொடரும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 4259.

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

வட்டுக்கோட்டை மேற்கு
வயிரமுத்து கந்தையா
—வழக்காளி.

எதிராக

வட்டுக்கோட்டை கிழக்கு
1. மயில்வாகனம் பாலசிங்கமும்
2, பெண் நாகரத்தினமும்
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B, 4259-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக கப்படும் இரண்டு துண்டுக்காணிகளை 1963-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16-ம் திகதி (16-10-63) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3800/- இன்னும் ரூபா 2500-க்கு 14-9-61 தொடககம் 12-12-61 வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும். கோட்டுச் செலவு கொடுபடடது, தீர்ப்பின் பின் ரூபா 1000 கட்டப்பட்டது

காணிகள் விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுககோட்டை கோயிற்பற்று, வட்டுக்கோட்டை கிழககிறை. "சந்தப்பிலாவத்தையும், தனலசாட்டியும்" பர. நில. இலா. 47/?-ம் குளி 1⅛. கல்வீட்டில் அரைவாசிப்பங்கும், வான்பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு பொன்னம்பலம் பெண் பறவணுச்சிக்கும் கிழக்குப்பக்கமாக பொதுவான ஒழுங்கையிலிருந்து வரும் கையொழுங்கைமுகப்பும். வடக்கு பொன்னையா கைம்பெண் சிவபாக்கியத்துக்கும், சுப்பிரமணியம் பெண் வள்ளியம்மைக்குமுரிய ஆதனங்கள். மேற்கு அமிர்தலிங்கம் திருஞானசம்பந்தமூர்த்திக்கும், வயித்திலிங்கம் பெண் செல்லம்மாவுக்குமுரிய ஆதனங்கள் தெற்கு முருகேசு கைம்பெண் பாக்கியத்துக்கும், பங்காளருக்கும், பொன்னம்பலம் வயித்திலிங்கத்துக்குமுரிய ஆதனங்கள், மேற்சொல்லப்பட்ட எல்லைக்கு, கிழக்கெல்லைக்காணிக்கு கிணற்றில் பங்கும், வழிவாய்க்காலும் தூர்வையும் புறநீங்கலானவை. முற்பதிவு E 136/74.

2. மேற்படி இறை "தலங்கமகை" பர, நெல். இலா. பத்து. எல்லை கிழக்கு மயில்வாகனம் பெண் மாரிமுத்துவினுதனம். வடக்கு கதிர்காமர் குமாரசாமி பெண் சிவக்கொளுந்துவினுதனம். மேற்கு கணபதிமுத்து பொன்னம்பலத்தினுதனம், தெற்கு பாலசிங்கம் பெண் நாகரத்தினத்தினுதனம், மேற் சொல்லப்பட்ட எல்லைக்குள் அடங்கிய முழுவதும். முற்பதிவு E 244/266.

தா. செல்லையா,
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
இல: 37.
கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M 125 6-9-63.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

யாழ்ப்பாணம் கரையூர்
சவரிமுத்து ஜெபமாலை
—வழக்காளி,

இல. M, B. 4377,

எதிராக

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி,
மூலாவைச்சந்தி
1. ஜெகப் கைம்பெண் மூத்தம்மா
2. ஜெகப் சுப்பிரமணியம்
3. ஜெகப் குணரத்தினம்
டேவிட் ரோட்டு, யாழ்ப்பாணம்
4. ஏ. டி. வஸ்தியாம்பிள்ளை
5, எம். எஸ். அருளானந்தம் கைம்பெண் லில்லிமலர்
--எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B, 4377-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963௵ புரட்டாதிமீ 21-ம௳ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3680-ம் 19-2-62 தொடக்கம் 4-9-62 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 12%வீத வட்டியையும். அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வீத வட்டியும், இதில் ரூபாய் 1000 கொடுபட்டிருக்கிறது.

காணி விபரம்:

வடமாகாணம், யாழப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று கரையூர் இறை "சிதம்பரவத்தை தறை" பர, நில. இலா. 5 – 3/32 குளி பனைமரங்களும் மற்றும் சேர்ந்த வகைகளும். எல்லை கிழக்கு எஸ். ஸாபரத்தினுதனம். வடக்கு ரோட்டு மேற்கு ஒழுங்கை. தெற்கு அல்பிறட் மேதரினுதனம்,

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
133 பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர் யாழ்ப்பாணம்
27-8-63.
M 126 6-9-63

ஜிந்துப்பிட்டியில் சமயப்பிரசாரம்

கொழும்பு சிந்துப்பிட்டி ஸ்ரீ. சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் மாதந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்றுவரும் கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவுத்தொடரில் இம்மாத நிகழ்ச்சி நிரலின்படி 8-9 63 இல் "பரமனும் பக்தரும்" என்ற பொருளில் பி. கே. குப்புசாமிப்பிள்ளை அவர்களும், 15 – 9 – 63 இல் "வரலாறதில் சமயம்" என்பது பற்றி திரு. மு. சோமசுந்தரம் பிள்ளையும், 22-9-63 இல "சமய வாழ்க்கை" என்ற தலைப்பின்கீழ் திரு. ஆ. கந்தையா எம்.ஏ. அவர்களும், 29-9-63 இல் "பேசாத நாள்" என்ற தலையங்கத்தின்கீழ் திரு. கே. வி. கணபதி அவர்களும் பேசுவார்கள். நிகழ்ச்சிகள் ஞாயிறுதோறும் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். 29-9-63 இல் நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி அஞ்சல் செய்யும்.

நல்லைக்கீர்த்தனம் — 44.

நீலி மகனை நினைத்தாயே!

*

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : பந்துவராளி : தாளம் : ஆதி

பல்லவி

நீலிமகன் இவனை நீயேனடி நினைத்தாய்
வேலின் அழகன்இவன் வேடத்திலே மயங்கி

அனுபல்லவி

பாலின்சுவை வெறுத்துப் பழமும் புளிக்குதென்று
மேலும் பசலைகொள்ள மேவும் காதலால்என்றும்

சரணம்

கடுங்கோபக் காரனடி கண்டவரின் மனத்தை
தொடும்படியே உருக்கித் தொல்லை கொடுப்பானடி
கடம்பமலர் புனைந்து கந்தன் உன்னையணைத்து
அடம்பிடித்தே என்றும் ஆட்டிவைப்பானடி.

இவ்வாரம் 8-9-63 — 14-9-63

உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

குடும்ப அலுவல்கள் குழம்பலாக இருக்கும். தந்தைவழி உறவினர் தொல்லை தருவர். உடல்நிலைக் குழப்பத்திற்கும் இடமுண்டு. பணமளவில் நல்லவாரம்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

எதிரிகளுக்கு இடையூறும் நிலபுலங்களால் இலாபமும் உண்டாம். பண இலாபமும் புகழும் நிச்சயம். உமது அலுவல்களில் கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் நீர் சந்திக்க வேண்டிவரும்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, ருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

மன அமைதி இருக்காது. இனத்தவருடன் மோதலுக்கிடமுண்டு. உடல்நிலையும் அவ்வளவு திருப்தியாயிருக்காது. வேலை வழமையில் சில மாற்றங்களுக்கிடமுண்டு.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

பணமளவில் நல்லவாரம். சகோதரர்கள் மிக உதவுவர். எதிரிகளுக்கு இடையூறும் நிலபுலங்களால் இலாபமும் உண்டாம். குடும்ப நிலைமை அவ்வளவு திருப்தியாயிருக்காது.

சிங்கராசி மகம், பூரம். உத்த ம் 1-ம் பாதம்.

எதிரிகளுக்கு இடையூறும் உமக்குப் புகழும் நிச்சயம். மனநிம்மதி இருக்காது. உடல்நிலைக் குழப்பம் உண்டாம். வயிற்றுக் குழப்பத்திற்கிடமுண்டு. உடன்பிறந்தோர் மிக உதவுவர்.

கன்னிராசி உத்தரம் 2, 3 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

கண்ணோய்களுக்கிடமுண்டு. சண்டைகளைக் கட்டிக்கொள்வதில் முந்திநிற்பீர். வாரமுதல் நாளை எச்சரிக்கையோடு கழிக்குக. பணமளவில் நல்லவாரம். தொழில் வெற்றியும் உண்டாம்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இனத்தவருடன் மோதலுக்கு இடமுண்டு. தந்தையாரின் உடல்நிலை பாதிக்கப்படும். திங்கள் செவ்வாய் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். மிகுதிநாட்கள் ஓரளவு சாதகமானவை,

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

வாரமுற்பகுதி புதுமுயற்சிகளுக்கு ஏற்றது. புதுமுயற்சிகளில் இலாபம் நிச்சயம். புதன் வியாழன் வெள்ளி காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். மூத்த உடன்பிறந்தோர் மிக உதவுவர். வார இறுதி இருநாட்களையும் எச்சரிக்கையோடு கழிக்குக. இனத்தவருடன் மோதலுக்கிடமுண்டு

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

புயல்நிறைந்த வாரம். உடல்நிலை தொடர்ந்து நிறைவற்றிருக்கும். பலதடைகளைத் தாண்டுவீர்

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

தந்தைவழி உறவினர் தொல்லை தருவர். குடும்ப நிலைமை திருப்தியாயிருக்காது. பணமளவில் நல்லவாரம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இனத்தவருடன் மோதல்களுக்கு இடமுண்டு. உடல்நிலை அவ்வளவு திருப்தியாயிருக்காது. பணமளவில் நல்லவாரம், நிலபுலங்களால் இலாபம் உண்டாம்,

---

விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 4789-ம் இலக்க வழக்கில் 1963-ம்௵ ஆடிமீ 11-ம௳ யைக்கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1963-ம்௵ ஐப்பசிமீ 8-ம௳ செவ்வாய்க்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னுற்காணும் ஆதனடாப்பின் ஒழுங்கின்படி என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

விபரம்

கரவெட்டி மேற்கு
கணபதிப்பிள்ளை கந்தையா
—வழக்காளி.

எதிராக

இமையாணன் 1. கணபதி ஐயா. 2. பெண் சின்னத்தங்கம்.
3. கரணவாய் தெற்கு கந்தர் சிவக்கொழுந்து.
—எதிராளிகள்.

அறவிடவேண்டிய
தொகையின் விபரம்:

சித்தாரித்த தொகை:- ரூபா, 714-40. 7-5-54 தொடக்கம் 11-11-54 வரைக்கும் ரூபா 380-க்கு 12 வீத வட்டி ரூபா 2 -80. 12-11-54 தொடக்கம் 11-7-63 வரைக்கும் ரூபா 737-20 க்கு 5 வீத வட்டி ரூபா 319-44. கோட்டுச் செலவு ரூபா 243-52- மொத்தம் ரூபா 1300-16.

ஆதனடாப்பு:

1. இமையாணன் குறிச்சியிறை தெற்குப்பட சந்தை, வீடு ½ ஷை நில, பர. 16 5/8. எல்லை கிழக்கு 2-ம் ஆதனம். வடக்கு பொன்னையா கைம்பெண் மூத்தாச்சிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக் குட்பட்டவைகளிற் சொரியலாய் 1/32 பங்கு.

2. ஷை இறை, படசந்தை, நில. பர. 7 3/8. எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு கண்ணன் கதிரனின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு 1-ம் ஆதனம். இதில் சொரியலாய் 1/36 பங்கும்.

3. ஷை இறை. நெருக்கட்டி ஒல்லை. நில, பர. 15. எல்லை கிழக்கு இராமு ஆறுமுகத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு கந்தையா சங்கரப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு சின்னத்துரை பெண் மாணிக்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு கந்தன் சங்கரிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்டவைகளில் சொரியலாய் ⅛ பங்கு.

S. C. Kanagasabai
கொம்மிசனர்
புலோலிகிழக்கு, 1-9-1963.
M 128 6-9-63

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

ஆனைக்கோட்டை தம்பு ஐயாக்குட்டி
—வழக்காளி.

இல. M.B. 3810.

எதிராக

1. இல 28, சிவப்பிரகாசம் ரோட்டு, வண்ணுர்பண்ணை மேற்கு கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்.
2. காரைநகர் கந்தப்பர் சின்னையா.
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3810 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963ம் ௵ ஐப்பசி மாதம் 5 ம் திகதி சனிக்கிழமை முற் பகல் பத்துமணிதொடக்கம் அந்தக் காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா: 12.250 ம் ரூபா 5000 க்கு 29-12-60 தொடக்கம் 21-12-61 வரை 15 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 369-90 சதம். கோட்டுச் செலவில் ரூபா 200 கொடுபட்டது.

காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை வடமேற்கிறை "வண்ணுர்பண்ணைக் குளம் கரையும், குளம்கரை வயலும்" பர. நீ இல நாலு குளி ஒன்பதே மூக்கால் (பர நீ இல 4 குளி 9¾) வீடும் கடைக்கட்டிடங்களும், புதிதாய் வெட்டப்பட்ட கிணறும், பயிர்வகைளும் வடக்கெல்லைக் காணியிலிருகம் கிணற்றுப் பாகமும் தூர்வை உரித்தும். ஃது உத்தரவுபெற்ற உலாந்தா என். தம்புவால் 23-2-1958 ல் இல. 622ல் தயாரித்த அளவு படத்தில் 1ம் 2ம் துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை கிழக்கு காங்கேசன்துறை ரோட்டு. வடக்கு பஞ்சநாதன் சிவசம்பு பெண் மகேஸ்வரிக் குரிய வாதனம், மேற்கு மயில்வாகனம் சிவப்பிரகாசத்திற் குரிய வாதனம். தெற்கு மயில்வாகனம் நாகராசாவிற்கும் சகோதரனுக்குமுரிய வாதனம். இதன் பதிவு D 263/202.

(2) ஷை வண்ணுர் பண்ணை வடமேற்கிறை 'வண்ணுர்பண்ணைக் குளங்கரையும் குளங்கரை வயலும்" குளி மூன்று (குளி 3) கிணற்றுப் பாகமும் தூர்வை உரித்தும் எல்லை கிழக்கு பஞ்சநாதன் சிவசம்பு பெண் மகேஸ்வரிக்குரிய வாதனம். வடக்கு பொன்னுத்துரை பெண் அன்னம்மாவிற்குரியவாதனம். மேற்கு சொல்லப்பட்ட மகேஸ்வரிக்குரிய வாதனம். தெற்குசொல்லப்பட்ட மகேஸ்வரிக்குரிய வாதனம். இதடங்கலிற் சொரியலா யரைவாசி, இதன் பதிவு D 212/186.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1963-ம்௵ ஆவணி மீ 21-ம௳
காரைநகர்,
M 127. 6-9-63.

அனைத்துலக சமயம் சைவம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

எழுதியுள்ளார். அந்நூலில், தமிழைப்போன்று ஒட்டுச்சொற்களுடைய மொழிகளை வழங்கும் மட்கட்கூட்டத்தினர் ஒருமையத்தினின்றும் பிரிந்து சென்றவர்களென்றும், அமெரிக்க ஆதிக்குடிகளின் மொழி அமைப்பும் இலக்கணப்போக்கும் தமிழோடு பெரிதும் தொடர்புடையனவாகவிருக்கின்றனவென்றும், அமெரிக்க ஆதிக் குடியினர் உறவின்முறையினரை அழைக்கும் முறைகள் தமிழ்நாட்டில் உள்ளதுபோலவே இருக்கின்றனவென்றும், அமெரிக்க ஆதிக்குடிகளும் தென்னிந்தியத்தமிழரும் ஆரிய சாதியினர் தோன்றுவதன்முன் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகவிருந்தாரகளென்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்பானியர் செல்வதன்முன் மெச்சிக்கோ, பேரு முதலிய நாடுகளில் சந்திர சூரிய வழிபாடும், பாம்பு வழிபாடும் இருந்தன. அம்மக்களின் வாழ்க்கை முறைகள் பெரிதும் தென்னிந்தியாவோடு தொடர்புடையன. அமெரிக்காவிலுள்ள மாயாமக்களின் பழைய நாகரிகத்துக்கும், கட்டடக்கலைக்கும் தென்னிந்தியத் தொடர்பு காணப்படுவதை ஆராய்ச்சியாளர் பலர் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். பாகை தரித்த மாவுத்தக யானையை ஓட்டிச் செல்லும் ஓவியமொன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது. அது கொலம்பஸ் காலத்துக்கு முன் இந்தியர் அமெரிக்காவை அறிந்திருந்தார்கள். புராணங்களில் பாதலம் எனப்படுவது அமெரிக்காவைக் குறிப்பதாகச் சிலர் கூறுவர். இந்தியாவினின்றும் சென்ற தமிழரே அமெரிக்காவில் சிவ வழிபாட்டைப் பரப்பினுர்களெனத் தெரிகிறது,

—தொடரும்.

யாழ்ப்பாணம்

—ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல B. M. 5024

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

கொக்குவில் மேற்கு
1. கந்தையா இரத்தினம்
2. இரத்தினம் செல்வராசா
3. இரத்தினம் பாலச்சந்திரா
4. இரத்திலம் இராசையா
5. இரத்தினம் ராணி.
   இதில் இருக்கும் 2 தொடக்கம் 5 வரையும் உள்ள வழககாளியானவர்கள் 1 வது எதிரிக்கு உரித்தாளியானவர்கள்.
6. இரத்தினம் சுப்பையா
7. இரத்திலம் குமாரசாமி
8. க. கனகரெத்தினமும் மனைவி
9. சரஸ்வதி

-வழக்காளிகள்.

எதிராக

கொக்குவில் மேற்கு
1. செல்லர் சின்னையாவும்மனைவி
2. திரவியம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 5024 ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆதனம் 1963-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12ம் திகதி சனிக்கிழமை (12-10-63) மூற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 636-00 21-8-62 தொடக்கம் 11-2-63 வரையும் ரூபா 350 க்கும் 10 வீத வட்டியும் அதன் பின் கூடிய முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கொடுக்கும் வரையும் இறுக்க வேண்டும். இதில் கோட்டுச் செலவு ரூபா 203-50 சதம். அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 160-75 சதம். வெலியாதுச் செலவு ரூபா 25-90 சதம் வரும் செலவு ரூபா 16-85 சதம்

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்க் கோயிற்பற்று கொக்குவில் மேற்குஇறை "கல்லைக்குக்காலும், கலகைக்குக்காலும்" என்னும் காணி நில. பர. 15 இதில் 2 பரப்பில் தெற்குப் பகுதியில் பனைமரமும் தானுய் உண்டானபயிரும்உண்டு. எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பொன்னையாவும் வடகரு கந்தர் சடையரும் மனைவி மாரிமுத்து மேற்கு தம்பிமுத்து அத்தையும் தெற்கு பங்காளர் சிவசம்பு மயில்வாகனத்தின் ஆதனமும் உண்டு. இதில் வழி வாய்க்காலும், மேற்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும் உண்டு. இதற்கு மேற்குப் பக்கத்தில் இருக்கும் நாலு அடிப்பாதையில் போக்குவரத்துக்கு உரிமை உண்டு. பதிவு இலக்கம் D 173/201.

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும், விலைமதிப்பாளரும்.
நம. 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
M. 129 6-9-63.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் உருவச்சிலை நிதி

நாவலர் பெருமான் நமது ஈழநாட்டில் சென்ற நூற்ருண்டில் உற்பவித்த ஓர் அவதார புருடர். தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சைவசமய அபிவிருத்திக்கும் அவர்புரிந்த தொண்டுகளின் பெருமை அளவிடற்கரியது,

அன்னாரின் ஞாபகமாக ஓர் உருவச்சிலையை யாழ்ப்பாண நகரில் நிறுவுதற்கு எங்கள் சபை தீர்மானஞ் செய்துள்ளது. சபையின் விருப்பத்தை நிறைவேற்றும் நோக்கமாக, யாழ்ப்பாண மாநகரசபை குறித்த சிலையை பொதுசன நூல்நிலைய முன்றிலில் நிறுவுவதற்கு இடம் தருவதாக வாக்களித்திருக்கிறது.

குறித்த சிலையை, சிறந்த முறையில் செய்வித்து ஒரு பீடத்தில் அமைக்க வேண்டியிருப்பதால் அதற்குரிய செலவுக்காக ஒவ்வொரு தமிழ் மகனையும் தன்னுலியன்ற பொருளுதவியைப் புரியும்வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

இந்நிதிக்கு உதவப்படும் தொகைகள், உதவியவர்களுடைய பெயர்களுடன் காலந்தோறும் இந்துசாதன தமிழ்-ஆங்கில பிரசுரங்களில் வெளியிடப்படும்.

த.முத்துச்சாமிப்பிள்ளை, ஆ.தனபாலசிங்கம், இ.பொ.இராசையா
தலைவர். செயலாளர். பொருளாளர்.
யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, 1-8-1963.

திருவிளையாடற் புராணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிப் பாராட்டு வழங்கும்படி இன்று இவ்வாண்டு பட்டம் பெறுவோர நம் அன்பர் ஸ்ரீ. ச. சிவகுமாரன் எம். ஏ. இவரைப் பைந்தமிழ்ச் செல்வராக்குகின்றது. செந்தமிழ்ச் சொக்கர் சீரருள் ஸ்ரீ. சிவகுமாரன் பழுத்த அன்பும் சைவப்பற்றும் உடைய சைவப் பாதிரியார், சைவத்தொண்டு புரிவதில் உறுதியும் ஊக்கமும் உடையவர், குருபீடங்களினிடத்தும், அடியார்களிடத்தும் ஆழ்ந்த பக்தி உடையவர் என்றும் ஆசி கூறினுர்கள்.

திருவிளையாடற்புராணம்

உயர்நூல், சொல் – பொருள்– கவிநயங்களுடன் திகழும் பெருநூல் என்னும் பெருமையுள்ளது திருவிளையாடற்புராணம். மேலும் பெரிய புராணத்தைப் போன்றே கயிறுசார்த்தி உண்மை காணும் பெருவழக்குடைய ஞான நூல் திருவிளையாடற்புராணம். இத் திருவிளையாடற் புராணம் ஸ்ரீ. பரஞ்சோதிமுனிவர் அருளிய பெருமை உடையது. அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் அருங்கவிகளாற் பாடி மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களாக அமைத்து 3363 செய்யுள்களால் முடித்தருளியுள்ளார்.

மேலும் ஆசியுரை கூறுகையில் திருவிளையாடற்புராணத்தை ஓதுவதால் நற்பலன்கள் பெருகும். சங்கநிதி–பதுமநிதி இருசெல்வங்களையும் பெறுவர். மகப்பேறு அற்ருேர் மகப்பெறுவர். பகையை வெல்வர், திருமணம் எய்தப் பெறுவர், பிணிகள் நீங்கும், ஆயுள் பெருகும், சிவன் திருவடி பேறு எய்தும் என்று நூற்பயன கூறுகின்றது. திருவாலவாய்க் காண்டம் தமிழின் பெருமையையும், கூடற்காண்டம் இறைவனின் பேரருளையும், மதுரை காண்டம் கடவுள் மணம் கமழுவதையும் காணலாம்,

ஸ்ரீலஸ்ரீ. கயிலை மகா சந்நிதானம அவர்கள் மேலும் ஆசிகூறுகையில் செந்தமிழ்ச் சொக்கர் அருளாடல்களையே இனிது விளக்கும் திருவிளையாடற்புராணம் தமிழர்களுக்குக் கிடைத்த பெருநிதி. சைவத்திருமுறைகள், சாத்திரங்கள் முதலிய அருங்கருத்துக்களையும், சங்கநூற்கருத்துக்களையும் தன்பாற்கொண்ட முழுநூல், புத்திப்பேறு, சித்திப்பேறு, முத்திப்பேறு கருதிச் சைவப்பெருமக்களால் பாராயணம் செய்யப் பெற்றுவரும் நூல்.

வேலி பயிரை விழுங்கினுல்!

—0—



பெரியவர்: விகடரே! இந்த மக்கள் வங்கியிற் கொஞ்சம் கடன் எடுக்க உதவி செய்யக்கூடாதா?

விகடன்: என்ன பெரியவர் பேசுகிறீர்? வங்கி நிர்வாகிகளுக்கு போதாதாமே கடன் கொடுக்க இருக்கும் பணம்! [illegible]

பெரியவர்: ஓகோ! வேலி பயிரை விழுங்குகிறதா?

நினைவு மண்டபம்

விபுலானந்தர் ஞாபகமாக மட்டக்களப்பு கல்லடி உப்போடை என்னுமிடத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மண்டபத்தை இன்று மைலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தலைவர் சுவாமி கைலாசானந்தாஜீ திறந்து வைப்பார்.

நல்லூர் செல்வச்சந்நிதி நடை பஜனை

1-9-63 ஞாயிற்றுக்கிழமை இரவு 8-30 மணியளவில் சுமார் 200 அடியார்கள் நடை பஜனையாகச் செல்வச்சந்நிதி புறப்பட, நல்லூர்க்கந்தன் ஆலயமுன்றலிற்குழுமினர்.

அ. இ. பொ. சே. சங்கச் சமயப் பிரசாரத்தலைவர் திரு. பொன். அப்புக்குட்டி சொற்பொழிவாற்றுகையில் "சைவ சமய ஞானவிருத்தி நிலையம் இவ்விதமான நடை பஜனையை ஆரம்பித்து அநேக வருடங்களாகச் சமயவளர்ச்சியை ஊக்குவித்ததுப் பாராட்டுதற்குரிய பணிகளைச் செய்து வருகின்றது" என்று கூறினுர்.

யாழ்ப்பாண மாநகர உதவி பிதா, திரு எஸ் துரைராஜசிங்கம் பேசுகையில் "சமய குரவர்கள் ஆன்மாக்கள் ஈடேற வழிவகுத்த மார்க்கங்களை இப்பஜனைக்கோஷ்டி கையாண்டு ஆய சேவைகளைச் செய்து வருவது பாராட்டுதற்குரியதொன்றெனவும், சமய வளர்ச்சிக்கு இவ்விதமான பஜனைக் கோஷ்டியால் அனேக நன்மைகள் ஏற்பட ஏதுவாகின்றதெனவும் யாவரையும் இவர்களுடன் ஒத்துழைக்கும்படியும் வேண்டிக்கொண்டார் திரு.த. இராசரத்தினம் பாவநக்கும் நன்றிகூறினுர். 2-9-63 அதிகாலை 4-30 மணியளவில் இக்கோஷ்டி செல்வச்சந்நிதியை யடைந்து பகல் 10-30மணிவரை பஜனை செய்து வீதிவலம் வந்தது.

செல்வச்சன்நிதி "ஆனந்தாஸ்ரம" நிர்வாகத்தர் ஸ்ரீமத். மு மயில்வாகனசுவாமிகளால் இக்கோஷ்டியிற் பங்குபற்றிய அடியார்க்ள் யாவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

மலையகத்தில் மார்க்க போதனை

ஞேசாலை சைவ நீதிக் கழகத்தினர் வித்துவான், சைவப்புலவர் திரு. வ. செல்லையா, திரு. ஆர். சிவலிங்கம் எம். ஏ. திரு. எஸ். பாலக்கிருஷ்ணன், திரு. எஸ். எஸ். குமாரகுலசிங்கம். திரு ஆர். எம். கந்தையா, திரு. சு. பிரேமசம்பு ஆகியோரைக்கொண்டு சமயப்பிரசாரங்களும், திருமதி. ஸ்ரீகாந்தி கணநாதன், திரு. நா. அருமைநாயகம், திரு. ம. கனகரத்தினசிங்கம், திரு. கே. இராசையா ஆகியோரைக் கொண்டு கூட்டு வழிபாடுகளும், மலைநாட்டுப் பல ஊர்களிலும் சென்ற மாதம் செய்வித்துள்ளனர்.

அணிந்துரை அரங்கம்

"எங்கள் தலைவர்"

இராசவாசல் சி. தியாகராசா அவர்களின் 50 ஆண்டு காலச் சமூக சேவைகளைப் பாராட்டுமுகமாக யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தினர் சென்ற மாதம் யாழ். மாநகர சபை மண்டபத்தில நடாத்திய பொன்விழாவின்போது வெளியிடப்பட்ட இந்தநூல் திரு. த. துரைசிங்கம் அவர்களால் தொகுத்து எழுதப்பட்டது.

நாட்டில் தோன்றிய பல தலைவர்களாலும் பாராட்டப் பெற்றவரான திரு தியாகராசா அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய தொண்டு மானிப்பாயில் இந்துக்கல்லூரிகள், மாநத்துவ விடுதிகள், கிராமச் சீர்திருத்தங்களுக்கெல்லாம் மூலவேராக இயங்கிய சேவா நிலையங்கள் தோன்றக் காரணமாயிருந்தமை 2-வது உலகப் போர்க்காலத்தில் ஆகாயப் பாதுகாப்புப்படையில் மேற்பார்வையாளராயும் யுத்த தகவற பிரசார அதிகாரியாகவும் இருந்து அன்னார் ஆற்றிய தொண்டுகள் யாழ்ப்பாணத்தில் சேமிப்பு இயக்கம், யாழ்மாவட்ட சனசமூக நிலையசமாசம்பலசைவப்பாடசாலைகள் ஆகியனவற்றின் தந்தையாகிஆற்றிய தொண்டு ஆகியனவற்றைப் பாராட்டி எழுதப்பட்டது இந்நூல்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் [illegible] இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 6-6-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org